FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.) u/s 173 BNSS

(குநவி-தொ-பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120340

1. District : Namakkal PS: V&AC Year: 2026 FIR No.: 02/AC/2026 Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள் 10.02.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 1) 29.01.2026 at about
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 1600hrs

Time Period : Time from : Time to : 2) 09.02.2026 at about
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை 1730 hrs.

(b) Information Received at PS. Date : 10.02.2026 Time : 0900hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Vol-I Time : 0930hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 1.5kms East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : — (b) Address : Namakkal Municipal Corporation
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : C. Kathirvel (b) Father's/ Husband's Name : Chidambaram
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு Age-57 நாட்டினம் Indian வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Farmer (g) Address : 1/92-1, Chinna Ayyampalayam, Nallipalayam Post, Namakkal.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Shankar, Revenue Assistant, Namakkal Municipal Corporation

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted,

Separate sheets enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

10/2/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

10/02/26

15. Date & Time of despatch to the court: 10.02.2026 10.30 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. PRABHU,
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
VAC, Namakkal.

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 02/AC/2026, u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...,

இன்று 10.02.2026-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணிக்கு நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது, வழக்கின் புகார்தாரர் திரு.C.கதிர்வேல், த/பெ.சிதம்பரம், க.எண்.1/92-1 சின்னஅய்யம்பாளையம், நல்லிபாளையம் (Po), நாமக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர் C.கதிர்வேல், த/பெ. சிதம்பரம், க.எண்.1/92-1 சின்னஅய்யம்பாளையம், நல்லிபாளையம் (PO), நாமக்கல் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, நாமக்கல். ஐயா, நான் நாமக்கல் மாநகராட்சி சின்னஅய்யம்பாளையத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது குடும்ப சொத்தான விவசாய நிலம், காலி மனை மற்றும் நான்கு வீடுகளை நான் எனது மகன் மற்றும் மகளுடன் 2025 ஜுன் மாதம் எண்.1 இணை சார்பதிவாளர் நாமக்கல் அலுவலக ஆவண எண்.2554/2025-ன்படி பாகக்கறார் செய்து பிரித்து கொண்டேன். அதில் என்னுடைய மகன் சௌந்தர்யனுக்கு பாத்தியப்பட்ட நாமக்கல் மாநகராட்சி வார்டு-9-க்கு உட்பட்ட சின்ன அய்யம்பாளையம் கிராமத்தில் கதவு எண்.1/90, 1/90-1, 1/91, 1/92-ல் உள்ள வீடுகளுக்கு சொத்து வரியை என்னுடைய பெயரிலிருந்து எனது மகனின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்காக எனது மகன் சௌந்தர்யன் பெயரில் 28.01.2026-ம் தேதி நாமக்கல் மாநகராட்சியில் நான் ஒரு விண்ணப்பம் கொடுத்தேன். அந்த விண்ணப்பம் தொடர்பாக நாமக்கல் மாநகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் வருவாய் உதவியாளர் திரு.சங்கர் என்பவரிடம் இரவு சுமார் 7 மணியளவில் நான் அவரது செல்போன் எண் 9442340348-ற்கு எனது செல்போன் எண் 9843261525-ல் இருந்து போன் செய்து பேசினேன். அப்போது

அவர் சொத்து பற்றிய ஆவணங்களை எடுத்துக் கொண்டு தன்னை அலுவலகத்திற்கு நேரில் வந்து பார்க்குமாறு சொன்னார். அதனால் நான் எனது வீட்டு பத்திரங்கள் மற்றும் சொத்து மற்றும் குடிநீர் வரி ரசீதுகளை எடுத்துக் கொண்டு நாமக்கல் மாநகராட்சி அலுவலகத்திற்கு சென்று வருவாய் உதவியாளர் திரு.சங்கர் அவர்களை நேரில் பார்த்து ஆவணங்களை காண்பித்தேன். அவற்றை வாங்கி பார்வையிட்ட திரு.சங்கர், தான் வீடுகளை நேரில் வந்து பார்த்து அளந்துவிட்டு சொத்துவரி மதிப்பீடு செய்து பெயர் மாற்றம் செய்து தருவதாக சொன்னார். மறுநாள் மாலை சுமார் 4 மணியளவில் அவர் நேரில் வந்து எனது வீடுகளை பார்த்து அளந்துவிட்டு, தான் வீட்டுவரி மதிப்பீடு செய்துவிடுவதாகவும், அதற்கு கொஞ்சம் செலவாகும் என்றும், அதை தனியாக எனக்கு கொடுத்துவிடுங்கள் என்றும் சொன்னார். நான் எவ்வளவு சார் என்று கேட்டதற்கு, அவர் ரூ.5,000/- ஆகும் என்று சொன்னார். நான் மொத்தம் 5000 ரூபாயா சார் என்று கேட்டதற்கு, அவர் இல்லை ஒரு வீட்டிற்கு ரூபாய் 5000 என்று மொத்தம் ரூ.20,000/- கொடுக்க வேண்டும் என்றும், ஏற்பாடு செய்துவிட்டு என்னை பாருங்கள் என்றும், மற்றபடி யார் ரெகமண்டேசன் செய்தாலும் கூட வேலை நடக்காது என்றும் சொல்லிவிட்டு சென்றுவிட்டார். பிறகு எனது மகன் காலேஜ் அட்மிசன் சம்மந்தமாக வெளியூர் சென்றுவிட்டதால் ஒரு வாரமாக மாநகராட்சி அலுவலகம் செல்லவில்லை. அதனால் நான் நேற்று 09.02.2026-ம் தேதி நாமக்கல் மாநகராட்சி அலுவலகம் சென்று எனது வீடுகளுக்கு வாட்டர் சர்வீஸ் டெபாசிட் தொகை கட்டிவிட்டு, வருவாய் உதவியாளர் திரு.சங்கர் என்பவரை பார்த்தபோது அவர் அவருடைய இருக்கையில் இல்லை. எனவே நான் வீட்டிற்கு வந்துவிட்டு அன்று மாலை சுமார் நான்கு மணிக்கு மேல் திரு.சங்கர் அவர்களுக்கு போன் செய்து சொத்துவரி பெயர் மாற்றம் குறித்து பேசினேன். அதற்கு அவர் நேரில் அலுவலகத்திற்கு வருமாறு சொன்னார். அதனால் நான் நாமக்கல் மாநகராட்சி அலுவலகத்திற்கு நேரில் சென்று மாலை சுமார் ஐந்தரை மணியளவில் அவருக்கு போன் செய்து பேசி ஆபீசுக்கு வந்துவிட்டேன் சார் என்று சொன்ன போது, அவர் என்னை அங்கேயே இருங்கள், வெளியே டீக்கடைக்கு போய் பேசுவோம் என்று

சொன்னார். எனவே நான் அலுவலக மெயின்கேட் அருகில் காத்திருந்தேன். சிறிது நேரத்தில் வெளியே வந்த அவர் அலுவலகம் எதிரில் இருந்த மைசூர் பில்டர் காபி கடைக்கு என்னை அழைத்துச் சென்றார். அங்கு வைத்து அவரிடம் பேசிய போது, நான் ஒரு வாரமாக மகன் படிப்பு விசயமாக வெளியே சென்றுவிட்டதால் உங்களை பார்க்கமுடியவில்லை என்று சொல்லிவிட்டு, சொத்துவரி பெயர் மாற்றத்திற்கு நீங்க ஏற்கனவே கேட்ட பணத்தில் ஏதாவது குறைக்க முடியுமா சார் என்று கேட்டேன். அதற்கு அவர் நிறைய வேலை இருக்கு, நார்மலா வரி போடறதற்குத்தான் இருபதாயிரம், இதுல வரிய குறைச்சு போடனும்னா கூடுதலாக இன்னும் பணம் செலவாகும் என்றும், இந்த வேலைக்கு நான் எல்லா மேலதிகாரிகளையும் கவனிக்கனும், அதனால் 20,000 ரூபாய் கண்டிப்பாக கொடுத்தால் தான் உங்கள் வேலையை முடிக்க முடியும் என்றும் சொன்னார். அதனால் நான் சரிங்க சார் உங்களை எப்ப வந்து பார்க்கட்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் நான் வெளியே போனாலும் போய்விடுவேன், அதனால் பணம் ரெடிபண்ணிட்டு நாளை என்னிடம் போனில் பேசுங்கள் என்று சொன்னார். நானும் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். என்னுடைய மகன் பெயரில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்வதற்கு நாமக்கல் மாநகராட்சி அலுவலக வருவாய் உதவியாளர் திரு.சங்கர் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.20,000/- கேட்ட நாமக்கல் மாநகராட்சி அலுவலக வருவாய் உதவியாளர் திரு.சங்கர் அவர்களை இன்று 10.02.2026-ம் தேதி அவர் கேட்ட லஞ்சப் பணம் ரூ.20,000/-த்துடன் நேரில் சந்திக்க தயாராக இருக்கிறேன், அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (Sd/-xxxx (C.Kathirvel) 10/2/26.

Sir,

I received the above computer typed complaint on 10.02.2026 at 09.00 hrs and the genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity of the accused was also verified through sources and which is learnt to be not good. The motive and

antecedents of the complainant with the accused have been checked carefully and found nothing adverse. Hence, I obtained oral concurrence from the DVAC, Chennai and I registered a case in Namakkal Vigilance and Anti-Corruption, Cr.No.02/AC/2026, u/s. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 10.02.2026 at 09.30 hrs against the accused Tr.Shankar, Revenue Assistant, Namakkal Municipal Corporation. Sd/-(xxxx) (S.Prabhu) 10/02/2026. Inspector of Police, V&AC, Namakkal.

The original FIR along with original computer typed complaint of the informant Tr.C.Kathirvel are submitted to the Hon'ble Court of the Principal District and Sessions Judge, Namakkal and remaining copies are sent to the officers concerned and I took up investigation.

10/02/26

(S. PRABHU)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Namakkal.